சி.சி. 85/2022
அ.சா. 2 இஸ்ரவேல்
த/பெ. மைக்கேல்
21.07.2023

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. சாட்சி செல்வம் எனது மைத்துனர். நான் எதிரிகளுக்கும் அசா1க்கும் தள்ளுமுள்ளு நடந்து கொண்டு இருக்கும்போது வந்தேன். அதற்கு முன்பாக அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சண்டையை விலக்கிவிட்டு காவல் நிலையத்திற்கு அசா1ஐ அழைத்துச் சென்றேன். மருத்துவ மனைக்கு செல்லவில்லை. அசா1 செல்வம் எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

2.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

சி.சி. 85/2022
அ.சா. 1 செல்வம்
த/பெ. சவரிமுத்து
21.07.2023

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. சாட்சி இஸ்ரவேல் எனது மச்சான். சாட்சி ஆரோக்கியம் எனது தம்பி. சாட்சி மோச்சமேரி எனது தங்கச்சி, சாட்சி வேளாங்கண்ணி எனது மகள். சாட்சி ரமேஷ்ராஜா எனதுமருகன். சாட்சி சுகன்யா எனது மகள். சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லக்கூடிய சாட்சிகளின் வீடுகள் இரண்டு தெரு தள்ளி உள்ளது என்றால் ஒரே தெருவில் கடைசியில் உள்ளது. நான் நரிக்குடி ஊராட்சி செயலாளராக இருந்தபோதுதான் எனது மகன் கண்டுகொண்டான்மாணிக்கத்தின் ஊராட்சி செயலாளராக இருந்தார். எதிரிகளுக்கு வீட்டுவரி ரசீது போட்டுக்கொடுக்காததால் சிறுசிறு பிரச்சனைஇருந்தது என்றால் சரியல்ல. 04.10.2019ம் தேதி நரிக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நரிக்குடி காவல் நிலையம் அருகில் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் புகார் எழுதிகொடுத்துவிட்டு திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வந்தேன். சம்பவம் நடந்த சமயத்தில் எதிரிகளை நான் அடித்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் குற்ற எண். 150/19 பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் எதிரிகளை அடித்து காயப்படுத்தியபோது ஏற்பட்ட காயத்தை வைத்து நரிக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் இல்லை.

2. நான் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் வீட்டு வரி ரசீது கொடுப்பதில் ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு வன்மமாக எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்தவழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

3. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.